**முதல்வர் அலுவலகம், அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை – 641 013.**

**மேற்குறிப்பாணை எண் 9777/ஈ3/2025, நாள் 24.11.2025**

**பொருள்:-** மாணவர் பிரிவு – அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை – 13 2025–2026ஆம் கல்வியாண்டிற்கான மாநில அரசு வழங்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (BC/MBC/DNC) நல கல்வி உதவித்தொகை – புதியது மற்றும் புதுப்பித்தல் (Fresh & Renewal) – விண்ணப்பம் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

********

இக்கல்லூரியில் 2025–2026ஆம் கல்வியாண்டில் பி.இ முதலாமாண்டு, நேரடி இரண்டாமாண்டு (Lateral Entry) மற்றும் பிற கல்லூரிகளில் இருந்து இக்கல்லூரிக்கு மாறுதல் (Transfer) மூலம் சேர்ந்த மாணவர்கள் மற்றும் இதுநாள்வரை விண்ணப்பிக்காத மாணவர்கள் மாநில அரசு வழங்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (BC/MBC/DNC) நல கல்வி உதவித்தொகை (புதியது மற்றும் புதுப்பித்தல்) பெற கீழ்கண்ட வழிமுறைகளை பின்பற்றி விண்ணப்பத்தினை பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

- UMIS Portal–ல் உள்ள தங்களது விவரங்களை (DATA) சரிபார்த்து, பின்னர் NSP Portal–ல் (https://scholarships.gov.in/) or NSP OTR app (Play Store)ல் OTR Registration செய்து Data Sheet–ல் OTR எண்ணை குறித்துக் கொள்ளவும்.
- புதியது மற்றும் புதுப்பித்தல் (Fresh & Renewal) விண்ணப்பங்களுக்கான உறுதிமொழி, Data Sheet மற்றும் அவ்விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய ஏதுவாக Excel Sheet மாதிரி படிவம் (Model Form) ஆகியவை இக்கல்லூரியின் இணையதள பக்கத்தில் www.gct.ac.in > News & Events–ல் உள்நுழைந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தில் மாணவ/மாணவியர்கள் தங்களின் விவரங்களை ஆதார் அட்டையில் உள்ளது போன்று (பெயர், முகவரி மற்றும் கைபேசி) பூர்த்தி செய்து, உரிய சான்றிதழ்கள் (கல்லூரி கட்டண இரசீது, ஆதார் அட்டை, சாதிச்சான்றிதழ் மற்றும் வருமானச் சான்றிதழ் உள்ளிட்ட நகல்கள்) இணைத்து அதனுடன் DATA SHEET–ம் சரியாக பூர்த்தி செய்து இணைத்து அனுப்ப வேண்டும்.
- உதவித்தொகை பெற விருப்பம் இல்லாத மாணவ/மாணவியர்கள் உரிய காரணத்தை கடிதம் மூலம் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.
- மாணவர்கள் பயன்படுத்தும் கைபேசி எண் (Mobile Number) மற்றும் மாணவர்கள் பெயரில் துவங்கப்பட்ட வங்கி கணக்கு (ஆதார் எண்ணை இணைக்கப்பட்டது) எண்ணிற்கு மட்டுமே கல்வி உதவித்தொகை பெற இயலும் என்பதால் வேறு நபர்களின் கைபேசி எண் மற்றும் வங்கி கணக்கு எண் வழங்க கூடாது.
- மாற்றுத்திறனாளி மாணவர்கள் விண்ணப்பத்துடன் மாற்றுத்திறனாளிக்கான சான்றிதழ்களை இணைத்து அனுப்ப வேண்டும்.

- பூர்த்தி செய்த விண்ணப்பங்களை மொத்தமாக சேகரித்து துறை (ம) பிரிவு வாரியாக கல்வி ஆலோசகர் (Faculty Advisor) மற்றும் துறைத்தலைவர் (Head of the Department) கையொப்பம் பெற்று இணைப்பில் குறிப்பிட்ட தேதிக்குள் அலுவலகத்தில் மாணவர் பிரிவில் (கல்வி உதவித்தொகை) நேரில் சமர்ப்பித்து OTP Verification செய்ய வேண்டும்.
- சரியாக பூர்த்தி செய்யப்படாத, உரிய சான்றிதழ்கள் இணைக்காத, உரிய தேதிக்குள் பெறப்படாத மற்றும் துறைத்தலைவர் மற்றும் கல்வி ஆலோசகர் மூலமாக பெறப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- அரசு பள்ளியில் 7.5% பிரிவில் சேர்க்கை பெற்ற மாணவ/மாணவியர்கள் அரசாணை எண்221-ல் தெரிவித்துள்ளபடி, கல்வி உதவித்தொகை பெற தகுதி இல்லாத காரணத்தால், இப்பிரிவின் கீழ் சேர்க்கை பெற்ற மாணவ/மாணவியர்கள் விண்ணப்பிக்க வேண்டாம்.
- மாணவர்கள் மத்திய அரசு (NSP Portal) அல்லது மாநில அரசு (UMIS Portal) வழங்கும் ஏதேனும் ஒரு கல்வி உதவித்தொகைக்கு மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
- வேறு கல்லூரியிலிருந்து மாறுதல் பெற்று இக்கல்லூரியில் சேர்க்கை பெற்ற மாணவர்கள், தங்களின் கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களை அலுவலகத்தில் மாணவர் பிரிவில் (கல்வி உதவித்தொகை) நேரில் வந்து சமர்ப்பித்து OTP Verification செய்ய வேண்டும்.
- மாணவர்களுக்கு UMIS Portal Scholarship சம்மந்தமாக சந்தேகம் இருப்பின் அலுவலகத்தில் மாணவர் பிரிவு உதவியாளரை குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் (12.00PM–1.30PM) சந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/– கி. மனோன்மணி
முதல்வர்

**இணைப்பு:**– உதவித்தொகை விண்ணப்பம், Data Sheet மற்றும் மாதிரிப்படிவம்

**பெறுநர்**

அனைத்து துறைத்தலைவர்கள் – UG மற்றும் PG
(தகுதியுடைய மாணவ/மாணவியர்கள் உதவித்தொகை பெற விண்ணப்பிக்கும் பொருட்டு)

**நகல்:**

1. அறிவிப்பு பலகை – அனைத்து விடுதி, அலுவலகம் மற்றும் அனைத்து துறை
2. முதல்வரின் நேர்முக உதவியாளர்
3. "ஈ" பிரிவு கண்காணிப்பாளர்
4. "ஈ3" தொகுப்பு கோப்பு
5. முனைவர் இரா. தேவி, உதவிப்பேராசிரியர்/ தகவல் தொழில்நுட்பவியல் துறை (UMIS ஒருங்கிணைப்பாளர்)
   வழி– தகவல் தொழில்நுட்பவியல் துறைத்தலைவர்

// ஆணையின்படி அனுப்பப்படுகிறது //

கண்காணிப்பாளர்
26/11/25

## GOVERNMENT COLLEGE OF TECHNOLOGY, COIMBATORE -641013

### 2025-2026 Community Scholarship

### Application Submission & OTP Verfication Date

| S.NO | Department | I YEAR Application Submission Date | II YEAR Application Submission Date | III YEAR Application Submission Date | IV YEAR Application Submission Date |
|---|---|---|---|---|---|
| 1 | CIVIL ENGINEERING | 01-12-2025 To 22-12-2025 | 01-11-2025 To 22-12-2025 | 24-11-2025 To 22-12-2025 | 24-11-2025 To 22-12-2025 |
| 2 | MECHANICAL ENGINEERING | | | | |
| 3 | ELECTRICAL AND ELECTRONICS ENGINEERING | | | | |
| 4 | ELECTRONICS AND COMMUNICATION ENGINEERING | | | | |
| 5 | ELECTRONICS AND INSTRUMENTATION ENGINEERING | | | | |
| 6 | COMPUTER SCIENCE AND ENGINEERING | | | | |
| 7 | PRODUCTION ENGINEERING | | | | |
| 8 | INFORMATION TECHNOLOGY | | | | |
| 9 | INDUSTRIAL BIO TECHNOLOGY | | | | |
| 10 | COMPUTER SCIENCE AND ENGINEERING (AI AND MACHINE LEARNING) | | | | |

S/d-Dr.K.MANONMANI

**PRINCIPAL**

**//Forwarded By Order//**

26/11/25

SUPERINTENDENT

26/11/25